# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2016

| தரம் : 07 | புவியியல் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் : .................................................. | |

### பகுதி - I

**மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. உயிரின வாழ்க்கைக்குச் சாதகமான சூழல் காணப்படுகின்ற ஒரேயொரு கோள்
1) வியாழன் 2) சனி
3) வெள்ளி 4) புவி

02. புவியின் மத்திய கோட்டு விட்டம்
1) 12714km 2) 12750km
3) 12757km 4) 12414km

03. பூகோளத்தின் மத்தியில் கிழக்கு மேற்காக வரையப்படும் அகலக்கோடு
1) கிறீன்விச் கோடு 2) மத்திய கோடு
3) மகரக்கோடு 4) கடகக் கோடு

04. தீவாகவும், தனிநாடாகவும் அமைந்துள்ள கண்டம்
1) ஆபிரிக்கா 2) ஐரோப்பா
3) அவுஸ்திரேலியா 4) ஆசியா

05. உலகின் மிகப் பெரிய சமுத்திரம்
1) இந்து சமுத்திரம் 2) பசுபிக் சமுத்திரம்
3) அத்திலாந்திக் சமுத்திரம் 4) ஆட்டிக் சமுத்திரம்

06. இந்தியாவிலிருந்து இலங்கையைப் பிரிக்கும் ஒடுங்கிய நீர்ப் பரப்பு
1) மகலன் நீரிணை 2) மலாக்கா நீரிணை
3) பெரிங் நீரிணை 4) பாக்கு நீரிணை

07. இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவுகள்
1) மாலைதீவுகள், கியூபா 2) மடகஸ்கார், இலங்கை
3) இலங்கை, யப்பான் 4) அந்தமான் தீவு, பிலிப்பைன்ஸ் தீவு

08. சர்வதேச சமுத்திரச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு
1) 1996 2) 2002
3) 2010 4) 1994

09. பாகிஸ்தான், சீனா, யப்பான், இந்தியா முதலான நாடுகள் அமைந்துள்ள கண்டம்
1) அவுஸ்திரேலியா 2) ஆசியா
3) ஆபிரிக்கா 4) ஐரோப்பா

10. இலங்கையின் ஆகக் கூடிய நீளம். அகலம் முறையே
1) 224km, 432km
2) 430km, 250km
3) 432km, 224km
4) 224km, 112km

11. சிங்களவர்களும், தமிழர்களும் இணைந்து கொண்டாடும் பண்டிகை
1) தைப்பொங்கல்
2) தீபாவளி
3) சித்திரைப் புதுவருடப்பிறப்பு
4) வெசாக்

12. கரையோரங்களில் கடனீரேரிகள், ஆற்றுமுகத் துவாரங்களில் காணப்படும் தாவர வகை
1) முட்பற்றைக் காடுகள்
2) கண்டல் தாவரங்கள்
3) புல்வெளிகள்
4) பாசிகள்

13. இலங்கையின் ஆதிவாசிகள் வாழும் பிரதேசங்களில் ஒன்று
1) நிலாவெளி
2) தம்பபன்னி
3) மகியங்கனை
4) அம்பாந்தோட்டை

14. தொட்டுணர முடியாத மரபுரிமைகளில் ஒன்று
1) சிங்கராஜா வனம்
2) நாமல் பூங்கா
3) வெந்நீரூற்று
4) பழக்கவழக்கங்கள்

15. முருகைக் கற்பாறைகளுக்குப் பிரசித்தமான இடம்
1) பாசிக்குடா
2) ஹிக்கடுவை
3) அறுகம் குடா
4) நிலாவெளி

16. தென்னாசிய நாடுகளிடையே உயர்ந்த சமூக அபிவிருத்தி மட்டத்தை அடைந்த நாடு
1) இந்தியா
2) நேபாளம்
3) பாகிஸ்தான்
4) இலங்கை

17. இலங்கையின் நீர்வள நாகரிகம் ஆரம்பித்த பிரதேசம்
1) ஈரவலயம்
2) கரையோர வலயம்
3) உலர் வலயம்
4) அரைகுறை வறள் வலயம்

18. பலன, எல்ல, கினிகத்தன் முதலானவை உள்ளடங்கும் பௌதிக அம்சம்
1) மலைத்தொடர்
2) கணவாய்கள்
3) மேட்டுநிலங்கள்
4) நீர்வீழ்ச்சிகள்

19. ஜின் கங்கை கடலோடு கலக்கும் ஈரவலயப் பிரதேசம்
1) களுத்துறை
2) மாத்தறை
3) ஜின் தோட்டை
4) கொழும்பு

20. யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரை வழங்கும் பிரதான நீர் மூலம்
1) ஆறுகளிலிருந்து
2) குளங்களிலிருந்து
3) கிணறுகளிலிருந்து
4) நீர்வீழ்ச்சிகளிலிருந்து

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம், இரண்டாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**


01. 1) புவியியல் பாடத்தில் இரண்டாம் தவணைக்காக உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீட்டு வகைகள் இரண்டினையும் தருக. (02 புள்ளிகள்)

2) அக் கணிப்பீடுகளை மேற்கொண்ட பாட அலகுகளை எழுதுக. (02 புள்ளிகள்)

3) நீர் அக் கணிப்பீடுகளைப் பூர்த்திசெய்வதற்குப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

4) இவ் இரண்டு கணிப்பீடுகளையும் மேற்கொண்டதால் பாட விடய ரீதியாக நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் 2 எழுதுக. (04 புள்ளிகள்)

02. **கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தல் 01 - 12 வரை இலக்கமிடப்பட்டவற்றைத் தரப்பட்ட வற்றிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.**




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | தென் அமெரிக்கா | ( ) | 2) | பசுபிக் சமுத்திரம் | ( ) |
| 3) | பிரித்தானியா | ( ) | 4) | ஜப்பான் கடல் | ( ) |
| 5) | மத்திய கோடு | ( ) | 6) | மடகஸ்கார் | ( ) |
| 7) | கிறின்விச் கோடு | ( ) | 8) | அவுஸ்திரேலியா | ( ) |
| 9) | இலங்கை | ( ) | 10) | கிறீன்லாந்து | ( ) |
| 11) | கஸ்பியன் கடல் | ( ) | 12) | பாக்கு நீரிணை | ( ) |

(12 புள்ளிகள்)

03. 1) புவிச்சுழற்சி என்றால் என்ன?

2) புவிச்சுழற்சியினால் ஏற்படும் விளைவுகள் 2 தருக.

3) புவிகோள வடிவமானது என்பதற்கான ஆதாரங்கள் 2 எழுதுக.

4) பின்வரும் அகலக்கோடுகளைப் பெயரிடுக.

1) 23½ வட அகலக்கோடு -

2) 66½ தென் அகலக்கோடு

3) $90^0$ வட அகலக்கோடு

(4 x 3 = 12 புள்ளிகள்)

04. 1) கண்டங்கள் என்றால் என்ன?

2) 1) உலகில் மிகப் பெரிய கண்டம் எது?


2) உலகில் மிகச் சிறிய கண்டம் எது?

3) இலங்கைக்கு வடமேற்குத் திசையில் அமைந்துள்ள இலங்கைக்கு உரித்தான தீவுகள் மூன்று தருக.

4) இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதால் பெற்றுள்ள நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

05.




1) படத்தில் A, B, C என்ற ஆங்கில எழுத்துக்கள் குறித்து நிற்கும் தரைத்தோற்ற வலயங்களைப் பெயரிடுக.

2) தரைத்தோற்ற வலயம் 'B' இல் காணப்படும் எச்சக் குன்றுகள் மூன்றினை எழுதுக.

3) தரைத்தோற்ற வலயம 'C' இல் காணப்படும் நீர்வீழ்ச்சிகள் மூன்றினைத் தருக.

4) தரைத்தோற்ற வலயம் 'A' இல் காணக்கூடிய கரையோர நிலவுருவங்கள் ஆறு எழுதுக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

06. 1) இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கும் மூன்று வழிகளையும் எழுதுக.

2) உலர் வலயத்தில் கடும் வரட்சி நிலவுவதற்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

3) ஈரவலயத்தில் அதிக மக்கள் தொகை காணப்படுவதற்கான மூன்று காரணங்கள் எழுதுக.

4) இலங்கையில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்கள் மூன்று எழுதுக.

(4 x 3 = 12 புள்ளிகள்)